**செ. கு. எண்: 113** **நாள் : 26.10.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 26.10.2015

10.6.2015 அன்று வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், எசையனூர் மஜ்ரா, புதேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மனைவி திருமதி சந்திரா, வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

7.7.2015 அன்று வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், செம்பேடு கிராமத்தில் ஜல்லி ஏற்றி சென்று கொண்டிருந்த லாரியிலிருந்து மண் சரிந்து கவிழ்ந்ததில், அங்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பணியில் ஈடுபட்டிருந்த திரு. மல்லிகா மற்றும் திருமதி லட்சுமி ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

12.6.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், கப்பம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. தனகோட்டி என்பவரின் மகன் ஜெயபிரகாஷ்;

20.6.2015 அன்று கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், எழுமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமானுஜம் என்பவரின் மனைவி திருமதி வசந்தா;

–– ஆகியோர் வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியைம்;

13.6.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மணவாளக்குறிச்சி கிராமம், குன்னங்காடு பகுதியைச் சேர்ந்த திரு. ஐயப்பன் என்பவரின் மகன் சுகு;

14.6.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், ஏற்றக்கோடு கிராமம், வெட்டுகாட்டுவிளை பகுதியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் அர்ஜுன்;

-- ஆகியோர் வீட்டினருகே அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்தால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், செம்பேடு கிராமத்தில் 7.7.2015 அன்று ஜல்லி ஏற்றி சென்று கொண்டிருந்த லாரியிலிருந்து மண் சரிந்து கவிழ்ந்ததில், அங்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பணியில் ஈடுபட்டிருந்த ஆறு நபர்கள் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், செம்பேடு கிராமத்தில் ஜல்லி ஏற்றி சென்று கொண்டிருந்த லாரியிலிருந்து மண் சரிந்து விழுந்ததில், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**